**08.12.2022**

**OS.No. 416/2019 PW : 1, திரு. லோகநாதன்**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ3 நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட ஆவணமா என்று கேட்டால் அது தவறான ஆவணமாகும். அந்த அரசாணையில் சர்வே எண் 60/7ஏ-ல் ராமகோவிந்தன் என்பவருக்கு உரிமையில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின்னர் 60/7சி-க்கு எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க பிவாசஆ3 அரசானை வெளியிடப்பட்டது என்று சொன்னால் 60/7சி-க்கு நஷ்டஈடு கொடுத்தார்கள். 60/7சி-க்கான இழப்பீட்டை பெறும்போது நாங்கள் எவ்விதமான ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 60/7 எப்போது 60/7ஏ மற்றும் 60/7சி என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்று பிராதில் தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்த 2 சர்வே எண்களுக்கும் 2018க்கு மேல்தான் நாங்கள் பட்டா வங்கினோம். 60/7சி-ஐ அரசு ஆர்ஜிதம் செய்து சாலை அமைத்த பின்னர் அந்த சர்வே எண்ணை பொறுத்து 2018ல் எப்படி பட்டா வாங்கினோம் என்று கேட்டால் என் தந்தையின் பெயரில் பட்டா இருந்ததால் நாங்கள் பட்டா வாங்கினோம். சர்வே எண் 60/7 என் மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த சொத்து எங்கள் மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் ஆகவே அதை வா.சா.ஆ.1 பாக ஆவணத்தில் சேர்த்ததே செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. பாக ஆவணத்தில் சர்வே எண் 60/7க்கு

நான்குமால்கள் குறிப்பிடப்படவில்லை. சர்வே எண் 60/7 எங்கே இருக்கிறதே என்று எனக்க தெரியாது என்றும் ஆகவே இந்த பாக ஆவணம் 1ஆம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாசாஆ2 பிராதில் சர்வே எண் 60/7 பற்றி குறிப்பிடவில்லை. சொத்தின் மீதான உரிமையை நாங்கள் நிரூபிக்கவில்லை என்று எங்களுடைய முந்தைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவ்விதம் தான் வாசாஆ4 தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதியின் கணவர் தாக்கல் செய்த அவ.எண். 606/1989 வழக்கான வாசாஆ6 தீர்ப்பானையில் அவர் ஆக்கிரமிப்பு செய்ததை 1989ம் வருடமே சொல்யிருக்கிறார் என்றும் ஆகவே அது எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராததால் ஏ.எஸ். 117/2001 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 60/3ஐ பொறுத்து சொத்தை திருத்தம் செய்து 2வது மேல்முறையீடு செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. 60/3ல் ஆக்கிரமிப்பு இருப்பதாக நான் கூறுவது பொய் என்றும் 60/7ல் ஆக்கிரமிப்பு இருந்த விவரம் 1989ம் வருடமே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சர்வே எண் 60/3 குறித்து எனக்கு ஆட்சேபனை இல்லை. 1979ல் ஆர்ஜிதம் செய்ததை எதிர்த்து 2005ல் தான் ரிட் தாக்கல் செய்தோம். வாசாஆ11 உத்தரவில் 60/7 மற்றும் 60/7சி-யை பொறுத்து தான் பரிகாரம் கேட்டோம். எங்களுடைய கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம்

உத்தரவிட்டது. ஆகவே மீண்டும் 60/7ல் நாங்கள் கோருவது தவறானது என்றால் சரியல்ல. 60/7சி-யை பொறுத்து இழப்பீட்டு பணத்தை 2009ல் வாங்கினோம். இழப்பீட்டு பணத்தை பெற்ற பின்னர் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை வைத்துக் கொண்டு வட்டாச்சியரை மிரட்டி 60/7சி-க்கு பட்டா வாங்கியுள்ளோம் என்றும் ஆகவே வாசாஆ12 பட்டா செல்லாது என்றால் சரியல்ல. என் தந்தை பெயரில் பட்டா கேட்பதற்கு நாங்கள் கொடுத்த மனுவுடன் என்ன ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்தோம் என்று கேட்டால் பாகப்பிரிவினை ஆவணத்தையும் தாக்கல் செய்தோம். ஆர்.டி.ஓ. நேரடியாக விசாணை செய்தார். எஸ்.எல்.ஆர். நகலையும் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். ஆவணங்களை கொடுக்காமல் உயர்நீதிமன்ற உத்தரவை வைத்து பட்டா மாற்றிக் கொண்டோம் என்றால் சரியல்ல. வாசாஆ13ல் சர்வே எண் 60/7ஏ மற்றும் 60/7சி நெடுஞ்சாலை துறை கையகப்படுத்தியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 60/7சி-க்கு இழப்பீட்டு தொகை வழக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே வாசாஆ13 படியும் 60/7ஏ எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ14ல் சர்வே எண்60/7ஏ-ல் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் போக மீதியுள்ள நிலத்திற்கு இழப்பீடு கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 60/7சி-க்கு நாங்கள் முழு பணத்தையும் 2013க்கு முன்னரே பெற்றுக் கொண்டோம். அந்த சர்வே எண்ணுக்கு வாசாஆ15 பட்டா எப்படி கிடைத்தது என்று கேட்டால் அதை அரசாங்கமே கொடுத்தது. அந்த பட்டா தவறானது என்று 60/7ஏ மட்டுமே

எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று நாங்கள் வருவாய் துறையிடம் மனு கொடுக்கவில்லை. வருவாய் துறையில் எவ்வித ஆவணங்களையும் பரிசீலிக்காமல் உயர்நீதிமன்றத்தின் உத்தரவிற்கு பயந்து எங்களுக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றும் அது 1ஆம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதியின் கணவர் 1989 முதலே மின் இணைப்பு பெற்றிருந்தார். 60/7ஏ-ல் உள்ள மின் இணைப்ப அகற்ற வேண்டும் என்று மின் வாரியத்தின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2013ம் வருடம் தான் 60/7ஏ-யை ஆக்கிரமித்த விவரம் தெரியும் என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாசாஆ36ல் சர்வே எண் 60/3, 60/7ஏ மற்றும் 60/7சி-யை அளந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் உத்தரவிற்கு பின்னர் தான் வருவாய் துறையினர் அளந்தார்கள் என்றால் சரிதான். வாசாஆ36ல் சர்வே எண் 60/3 அளக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் சர்வே எண் 60/7ஏ அளக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதால் சர்வே எண் 60/7 மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ36ல் சர்வே எண் 60/3 பற்றி குறிப்பிடப்படவில்லை. உயர்நீதிமன்ற உத்தரவை வைத்து வருவாய் துறையினரை மிரட்டி எங்களுக்கு சாதமாக வாசாஆ36ஐ வாங்கிக் கொண்டோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு பட்டா படி 5 சென்ட் ஆகும். அது 2 ஏர் ஆகும். பட்டாபடி 2 ஏர்ஸ் அளவை சொல்லிவிட்டு பிராதில் சொத்தில் 3 ஏர்ஸ்

காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகளை சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை. தாவா சொத்து சம்பந்தப்பட்ட மூல ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆகவே 'பி' அட்டவனை சொத்தை பொறுத்து நாங்கள் கேட்கும் சுவாதீன பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 60/7ஏ-ல் 1ஆம் பிரதிவாதி ஆக்கிரமித்த விவரம் 1989ம் வருடமே எங்களுக்கு தெரியும் என்றும் ஆகவே அவருடைய அனுபவ பாத்தியதை நாங்கள் கேள்வி கேட்கமுடியாது என்றும் எங்களுக்கு சுவாதீன பரிகாரம் கிடைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. ஆகவே மின் இணைப்பை அகற்ற கோரும் வலியுறுத்து கட்டளை பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு தெரிந்தே 40 வருடமாக 1ஆம் பிரதிவாதி சர்வே எண் 60/7ஏ-ல் இருக்கிறார் என்றும் ஆகவே மாதம் ரூபாய் 10 ஆயிரம் நஷ்டஈட்டு பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதில்லை என்றால் சரியல்ல. 2004லேயே வழக்கு முடிவடைந்துவிட்டது என்றும் ஆகவே மனுக்களை கொடுத்து வழக்கு மூலம் இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.